[1][தமிழ்நாடு] சட்டம் VIII/1942[2]

[1942 ஆம் ஆண்டு தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாட்டுச்) சட்டம்.]

(1942 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது. முதலில் 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 நாளன்று புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது.)

[3][தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகளின் நிதியிலிருந்து குறித்த சில நிறுவனங்களை நிறுவுவதற்கு அல்லது பராமரிப்பதற்கு பங்களிப்புச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் பிற நோக்கங்களுக்காகவும் வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகளின் நிதியிலிருந்து குறித்த சில நிறுவனங்களை நிறுவுவதற்கு அல்லது பராமரிப்பதற்கு பங்களிப்புச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் பிற நோக்கங்களுக்காகவும் வகைசெய்வது உகந்ததாக இருப்பதால், இது இதன் மூலம் பின்வருமாறு இயற்றப்படுகிறது:–]

1. குறுந்தலைப்பு.– இந்தச் சட்டம், தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாட்டுச்) சட்டம் என வழங்கப்பெறும்.

[4][2. பங்களிப்புச் செய்தல், மாற்றுதல் முதலியவைக்கான அதிகாரம்.– (1) தஞ்சை மாவட்ட வாரியம் அல்லது அவ்வப்போது தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகளின் மேலாண்மை மற்றும் மேற்பார்வையை கொண்டிருக்கும் பிற அதிகார அமைப்பு அல்லது நபர், மாநில அரசால் விதிக்கப்படலாகும் அத்தகைய வரையுரைகள் மற்றும் கட்டுப்பாடுகள் எவையேனுமிருப்பின், அவைகளுக்கு உட்பட்டு,

(a) கூறப்பட்ட அறக்கட்டளைகளிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து,

(i) இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள்; மற்றும்

(ii) மாநில அரசால் இது தொடர்பாக அறிவிக்கப்படலாகும் பிற நிறுவனங்கள்;

---

[1] இந்த சொற்கள் "மெட்ராஸ்" என்ற சொல்லுக்கு, மாற்றாக 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத் தழுவல் ஆணை மூலம் அமைக்கப்பட்டன, இது 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத் தழுவல் (இரண்டாவது திருத்தம்) ஆணை மூலம் திருத்தப்பட்டது.

[2] நோக்கக் காரண விளக்கவுரைக்கு, 1941 அக்டோபர் 14 தேதியிட்ட புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழ், பகுதி IV–A, பக்கம் 179 ஐப் பார்க்கவும்.

[3] தமிழ்நாடு சட்டம் VII/1948 மற்றும் சென்னை சட்டம் XI/1949 ஆகியவற்றால் திருத்தப்பட்டவாறான நெடுந்தலைப்பு மற்றும் முகவுரையானது, 1955 ஆம் ஆண்டு தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாட்டு) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XI/1955) 2 ஆம் பிரிவால் முதலில் இருந்த நெடுந்தலைப்புக்கு மாற்றாக அமைக்கப்பட்டன.

[4] இந்தப் பிரிவு, சென்னை சட்டம் X/1949ஆல் திருத்தப்பட்ட முதலில் இருந்த 2 ஆம் பிரிவுக்கு மாற்றாக, 1955 ஆம் ஆண்டு தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாடு) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XI/1955) 3 ஆம் பிரிவினால் மாற்றப்பட்டது.

ஆகியவற்றை மேலாண்மை செய்வதில் நேரிடும் செலவினங்களுக்கு பங்களிக்க வேண்டும்;

(b) தஞ்சையில் முதல் தர கல்லூரி ஒன்றை நிறுவுதல் அல்லது மேலாண்மை செய்தல் நோக்கத்திற்காக மேற்கூறிய அறக்கட்டளைகளின் நிதியிலிருந்து நான்கு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐந்நூறு ரூபாய் தொகையைப் ஒதுக்களிப்பு செய்தல் அல்லது மாற்றம் செய்தல் மற்றும் மேற்கூறிய தொகையை மாநில அரசால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதம் அளிக்கப்பட்ட பத்திரங்களில் முதலீடு செய்து வைத்திருத்தல்; மற்றும்

(c) மேற்கூறிய முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து தஞ்சையில் மேற்கூறிய முதல் தர கல்லூரியை நிறுவுதல் அல்லது மேலாண்மை செய்தல் நோக்கத்திற்காக ஆண்டுதோறும் ஐம்பதாயிரம் ரூபாய் தொகையை பங்களிக்க வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள முதலீட்டின் மூலதனம், அந்தக் கல்லூரியின் நோக்கங்களுக்காக, தஞ்சை மாவட்ட வாரியம், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அந்தக் கல்லூரியின் நிர்வாகக் குழு ஆகிய மூன்று அறங்காவலர்களின் கூட்டுப் பெயர்களில் அறக்கட்டளையில் வைக்கப்படும்; ஆனால், மாவட்ட வாரியம் மட்டுமே முதலீட்டிலிருந்து பெறப்படும் வட்டியைப் பெறவோ அல்லது கையாளவோ தகுதியுடையதாக இருக்கும்.

(3) மாவட்ட வாரியம் அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அதிகார அமைப்பு அல்லது நபர், அந்தக் அறக்கட்டளைக்குச் சொந்தமான எந்தவொரு நிலம் அல்லது கட்டிடத்தையும், கால்நடைகளை மேம்படுத்துவதற்காகப் பண்ணைகளை நடத்துவதற்காக, வாடகைக்கு இல்லாமல் அல்லது சலுகை வாடகை விகிதத்தில், அரசின் ஒரு துறை, எந்தவொரு உள்ளாட்சி அமைப்பு அல்லது எந்தவொரு தனியார் நிறுவனத்திற்கும் குத்தகைக்கு விடலாம்; மேலும் அத்தகைய எந்தவொரு குத்தகையையும் ஒரு நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் புதுப்பிக்கலாம்.]

[5][3. [[6]]ஏற்கனவே செய்யப்பட்ட பங்களிப்புகளின் செல்லுந்தன்மை.– இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மேலாண்மைக்காக மேற்கூறிய அறக்கட்டளைகளின்

---

[5] 3 ஆம் பிரிவானது, 1949 ஆம் ஆண்டு தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாடு) திருத்தச் சட்டத்தின் (மெட்ராஸ் சட்டம் XI/1949) 4(1)ஆம் பிரிவினால், அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என மறுபெயரிடப்பட்டது.

[6] இந்த சொற்களானது, மெட்ராஸ் சட்டம் XI/1949 இன் 4 (1) ஆம் பிரிவினால் "மேற்கூறிய நிறுவனங்கள்" என்ற சொற்களுக்குப் மாற்றாக அமைக்கப்பட்டன .

நிதியிலிருந்து செய்யப்பட்ட அனைத்து பங்களிப்புகளும்] முறையாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படும், மேலும் அதன் செல்லுந்தன்மை எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குள்ளாக்கப்படாது.

[7] [ ].

## இணைப்புப் பட்டியல்.

### கல்வி நிறுவனங்கள்.

1. சமஸ்கிருதக் கல்லூரி, திருவடி.

2. உயர்நிலைப் பள்ளி, ஒரத்தநாடு.

3. ராஜமடத்தில் உள்ள பள்ளி (தற்போது நடுநிலைப் பள்ளி என்று அழைக்கப்படுகிறது, ராஜமடம்).

4. பெண்கள் பள்ளி, நிடாமங்கலம்.

5. இலவச மகரத்த பள்ளி, தஞ்சை.

6. ஸ்ரீயச்சத்திரத்தில் உள்ள ஹரிஜன ஆண்களுக்கான விடுதி.

### மருத்துவ நிறுவனங்கள்.

1. ராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சை.

2. உள்ளூர் நிதி மருந்தகம், மெய்மிசல்.

3. உள்ளூர் நிதி மருந்தகம், நிடாமங்கலம்.

4. உள்ளூர் நிதி மருந்தகம், திருவடி.

5. உள்ளூர் நிதி மருந்தகம், ஒரத்தநாடு.

6. உள்ளூர் நிதி மருந்தகம், மணமேல்குடி.

[7] மேற்சொன்ன சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவினால் சேர்க்கப்பட்ட (1) ஆம் உட்பிரிவு மற்றும் (2) ஆம் உட்பிரிவின் தொடக்கத்தில் உள்ள அடைப்புக்குறிகள் மற்றும் எண் "(1)", 1955 ஆம் ஆண்டு தஞ்சை சத்திரம் அறக்கட்டளைகள் (பயன்பாட்டு) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XI/1955) 4 ஆம் பிரிவால் விட்டுவிடப்பட்டன.